முருகப்பெருமான் துணை

**மகான் அர்ச்சுனன் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.09.2022, புதன்கிழமை

1. தவபலம் கொண்ட குருவே
தரணியோர்க்கு ஞானம் அருள
அவதாரம் புரிந்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறைவிலா இருபானீர்திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 22 நாள், 07.09.2022 புதன்கிழமை)
தெரிவிப்பேன் அர்ச்சுனன் யானும்
தேசிகனுக்கு அருளாசி தன்னை
3. தன்னையே உலகநலமுற உரைப்பேன்
தவசி அரங்கன் செய்துவரும்
அன்னதான நெறிமுறைகள் தனை
அனைவரும் ஏற்று வருக
4. வருகவே தரும சக்தி நிலை
வரமாகக் கூடி உலகோர்க்கு
கரும வினைகளதும் அகலும்
காரிய வெற்றிகளும் கைகூடும்
5. கூடவே ஜீவ காருண்யம் எனும்
குறைவிலா மகாசக்தி பரவி
நாடெங்கிலும் ஞானவான்களெனும்
ஞானப்படைகள் பெருகி நின்று
6. பெருகிநின்று சமூக மாற்றமாக
பேருலகம் அரங்கன் தயவால்
தரும ஞான ஆட்சி காணும்
தடையில்லா நல்ல வளர்ச்சியும் காணும்
7. காணவே கண்ணியமிக்க நல்
கருணைவடிவான வண்ணம்
தானாக எங்கும் மக்களின் சேவை
தரும வழி நடந்து இனிதே
8. இனிதே ஞான ஆட்சி காலமாக
ஏழ்மையை இடர்களை விரட்டும்
கனிவேலவன் அருளை பெற்ற
கண்டுரைப்பேன் ஞான சித்தர் காலமாக
9. ஆகவே மாற்றம் கண்டு
அனைத்தும் ஏற்றம் காண்கும்
வகைபட உலகம் எங்கிலும்
வளமும் இயற்கை பலமும்

10. பலமுற ஞானிகள் வெளிப்பாடு
பாருலகில் மிகுந்து சடுதி
சலனமற உலகமாற்றம் தானும்
சாற்றிடுவேன் அரங்கன் அவதாரம்வழி

11. வழிதனில் ஆற்றல்பட கண்டு
வணங்கி வருபவர் எல்லாம்
அழியாமை கண்டுத் தேறுவர்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–